***IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD.***

***DATE : 22.07.2025***

Case No. : OS.13/2023

Deposition of Witness for Prosecution : PW.1

Name : குமாரி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of July 2025

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது 19.07.2019-ம் தேதி வாங்கப்பட்டது. அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண். 29/14-ல் அதன் அளவு 23 1/2 செண்ட் ஆகும். சார்பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் பதிவு எண். 505/2019 ஆகும். தாவா சொத்தை பொறுத்து எவ்வளவு தொகை மறுபயனாக கொடுத்து கிரையம் ஏற்பட்டது என்பது குறித்து பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்தில் காப்பி, சவுக்கு பயிரிடப்பட்டுள்ளது. தாவா சொத்தினை பொறுத்து என்னென்ன வருவாய் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் பட்டா, பத்திரம், சிட்டா, அடங்கல் போன்றவை தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்திற்கு பக்கத்தில் பிரதிவாதிகளின் இடம் உள்ளது என பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள் அதன் புல எண் தெரியுமா என்றால் 29/9 மற்றும் 29/15 ஆகும். இரண்டு புல எண்களிலும் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண பத்திரத்தில் பிரதிவாதிகள் உங்களிடம் சண்டை போட்டதாக சொல்லப்படும் தேதி தெரியுமா என்றால் 06.08.2019-ம் தேதி ஆகும். சண்டைபோட்டதன் காரணமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்த தேதி தெரியுமா என்றால் 07.08.2019-ம் தேதி ஆகும். பிரமாண வாக்குமூலத்தில் உங்களது கணவருக்கு எதிராக உங்களால் காவல் நிலையத்தில் புகாரானது கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படும் சங்கதி

குறித்து ஏதேனும் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் சொல்வது போன்று பிரதிவாதிகளின் நிலமானது உங்களது நிலத்தின் அருகிலுள்ள காரணத்தினால் ஆக்கிரமிப்பு செய்வதாக நினைத்து அவர்கள் மீது காவல் நிலையத்தில் பொய்யாக புகார் கொடுக்கப்பட்டும், மேற்படி தாவா வழக்கானது தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. R. Elanchezhian
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.